கல்குடா கல்வி வலய வளநிலையப் பரீட்சைச் சபை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை-2018

பொருளியல்-1

தரம்-13 (2018) **தவணை-06** **2 மணித்தியாலம்**

கவனிக்க

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க
- **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க

1. பொருளாதார வளங்கள் அருமை, மாற்றுப்பயன்பாடு எனும் பண்புகளை கொண்டிருப்பதால் பொருளியலில் தோன்றும் பிரதான விடயம்
   1.தெரிவும், அமயச் செலவும்
   2.அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளும், பொருளாதார அமைப்புக்களும்
   3.தெரிவும், அடிப்படைப் பிரச்சினைகளும்
   4.வளப்பகிர்வும், அமயச் செலவும்
   5.தெரிவும், வளப்பகிர்வும்

2. பின்வருவனவற்றுள் எப்பண்புகளின் இணைப்பாக பொருளாதாப் பண்டம் ஒன்றினைக் கருதலாம்
   A) அவை உற்பத்தியில் வளப்பயன்பாடு அற்றவை
   B) அவை மனித தேவையை திருப்திப்படுத்துவன
   C) அவை நுகர்வில் போட்டிக்குரியவை
   D) அவை நிரம்பலில் அமயச் செலவைக் கொண்டவை
   1. Aஉம் Dஉம் 2. Dமட்டும் 3. Bஉம் D உம் 4. Cஉம் D உம் 5. C மட்டும்

3. பின்வரும் கூற்றுக்களில் சிற்றினப் பொருளியல் கூற்றாக அமைவது எது?
   1.இலங்கையின் பணவீக்கம் 2017 இல் 6.6%ஆக அதிகரித்துள்ளது
   2.பொருளியளாளர்கள் பொருளாதார வளங்களை நிலம் உழைப்பு முதல் முயற்சி என வகைப்படுத்துவர்.
   3.இலங்கையின் மக்களின் சுயீட்ச சுட்டெண்ணை உயர்வாகக் கொண்ட மாவட்டம் கொழும்பு அகும்.
   4.இலங்கையின் விரிந்த பணநிரம்பல் (M_2b)அதிகரிக்கக் காரணமாக தேறிய செலாவணி ஒதுக்கு அமைந்தது
   5.நாடு ஒன்றின் உள்ளகப் பொருளாதாரத்திலும் வெளியகப் பொருளாதாரத்திலும் உறுதி பேண நிலையான விலைமட்டம் இன்றியமையாததாகும்.

4. சமூக மொன்றில் அருமையான வளங்களை பங்கிடும் போது திட்டமிட்ட பொருளாதார முறைமை ஒன்று நடைமுறைப்படுத்தப்படுவது
   1) சமூக தேவைகளுக்கு ஏற்புடையதான கட்டமைக்கப்பட்ட குழுவின் கட்டளைக்கு அமைவாகவாகும்.
   2) கேள்வியின் வலிமைத் தன்மையை கவனதில் எடுத்தாகும்.
   3) இலாபம் கூடிய பொருட்களை உற்பத்தி செய்வதனூடாக
   4) வாடிக்கையாளர் தேவை முன்னுரிமை அடிப்படையில்
   5) சந்தைத் தேவை முன்னுரிமை அடிப்படையில்

5. தற்போதைய இலங்கை பொருளாதாரம் சமூக சந்தைப் பொருளாதாரமாக மாற்றுவதற்கு எதிர் பார்க்கப்படுகிறது. அவ்வாறான சமூக சந்தைப் பொருளாதாரம் மூலம் எதிர்பார்க்கப்படுவது
   1) தனி நபர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதனூடாக
   2) சமூக சமத்துவத்தை உறுதியாக பேணுவதனூடாக மனித உரிமை முறைமைகளை பாதுகாத்தல்
   3) சந்தைப் பொருளாதாரத்தில் காணப்படும் வினைத்திறனற்ற நிலையை நீக்க அரசு தலையிடல்.
   4) பொருளாதாரத்தின் சட்ட அடிப்படையை கட்டியெழுப்புவதற்காக அரசு பொறிமுறையை உறுதிப்படுத்தல்.
   5) சமூகதத்தின் சகல பிரஜைகளுக்கும் வருமானம் சமனாக பகிர்ந்தளித்தல்.

www.kedu.lk


6. கிடை அச்சில் A பண்ட உற்பத்தியும் நிலைக்குத்தச்சில் B பண்ட உற்பத்தியும் காட்டுகின்ற உற்பத்திச் சாத்திய எல்லை ஒன்றின் உற்பத்திச் சேர்க்கைகள் வருமாறு

Aபண்டம்	Bபண்டம்
0	50
40	40
70	30
85	20
95	10
100	0

இத் தரவின் பிரகாரம் **B பண்ட** உற்பத்தியானது அதிகரிக்கும் போது ஒரு அலகுக்கான அமயச் செலவு

1.அதிகரித்துச் செல்லும் விதமாக உள்ளது
2.மாறாது செல்லும் விதமாக உள்ளது
3.குறைந்து செல்லும் விதமாக உள்ளது
4.அதிகரித்து ஓர் எல்லைக்கப்பபால் குறையும் விதமாக உள்ளது
5.குறைந்து ஓர் எல்லைக்கப்பபால் அதிகரிக்கும் விதமாக உள்ளது

7. ஒரு நாடு இன்னுமொரு நாட்டுடன் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதாகக் கொள்க. அதனைக் கீழ் உள்ள வரைபடம் காட்டுகிறது.



இவ் வரைபடத்தின் படி குறித்த நாட்டினது ஏற்றுமதியும் இறக்குமதியும் முறையே

1. ஏற்றுமதி 100 அலகு இறக்குமதி 125 அலகுகள்
2. ஏற்றுமதி 25 அலகு இறக்குமதி 100 அலகுகள்
3. ஏற்றுமதி 25 அலகு இறக்குமதி 50 அலகுகள்
4. ஏற்றுமதி 25 அலகு இறக்குமதி 150 அலகுகள்
5. ஏற்றுமதி 150 அலகு இறக்குமதி 25 அலகுகள்

8. கீழே உள்ள எவ் இணைப்பானது ஒரு பண்டத்தின் கேள்விக் கோட்டையும் நிரம்பல் கோட்டையும் வலது புறம் நோக்கி நகர்வடையச் செய்யும்

	கேள்விக் கோடு	நிரம்பல் கோடு
1	குறித்த பண்டத்தின் விலை குறைதல்	குறித்த பண்டத்தின் விலை குறைதல்
2	நுகர்வோரின் வருமானம் அதிகரித்தல்	உள்ளீடுகளின் விலை அதிகரித்தல்
3	நுகர்வோரின் எண்ணிக்கை குறைவடைதல்	உற்பத்திச் செலவு குறைவடைதல்
4	பதிலீட்டுப் பொருளின் விலை அதிகரித்தல்	செலிப்பான காலநிலை உறுவாகுதல்
5	இணைப்புப் பொருளின் விலை குறைதல்	குறித்த பண்டத்தின் விலை குறைதல்

9. குறித்த பண்டமொன்றின் கேள்விச் சமன்பாடு $QD = 50 - 2P$ஆகும். இதன் சந்தை விலை ரூபா 15 இல் இருந்து ரூ.10ஆக வீழ்ச்சியடையும் போது, நுகர்வோன் மிகையில் ஏற்பட்ட அதிகரிப்பு யாது? அதில் விலை வீழ்ச்சியால் புதிதாக சந்தைக்குள் வந்த நுகர்வோர் பெற்றுக் கொண்ட மிகை யாது?

	நுகர்வோன் மிகை அதிகரிப்பு	புதிய நுகர்வோன் பெற்ற மிகை
1	ரூபா 125	ரூபா 25
2	ரூபா 20	ரூபா 30
3	ரூபா 150	ரூபா 25
4	ரூபா 25	ரூபா 125
5	ரூபா 50	ரூபா 10


10. **P=40-1/2Q** கேள்விச் சமன்பாட்டில் எவ்விலையில் நெகிழ்ச்சி ஒருமையுடையதாக இருக்கும்

1. ரூபா. 10 2 .ரூபா. 20 3. ரூபா 30 4. ரூபா40 5. ரூபா. 80

11. சந்தை ஒன்றில் தேசிக்காய்க்கான சமநிலை விலை ரூபா7 ஆகவும் சமநிலைத் தொகை 15 அலகுகளாகவும் உள்ளது .பூச்சிய விலையில் கேள்வித் தொகை 50அலகுகளாகவும் பூச்சிய கேள்வித்தொகையில் விலை ரூபா10எனவும் கொள்க. அத்துடன் நிரம்பல் தொகை பூச்சியமாக உள்ளபோது விலை ரூபா4 ஆகும் .இத்தகவல்களின் படி உற்பத்தியாளர் செலவு மற்றும் உற்பத்தியாளர் மிகை எனபன

	உற்பத்தியாளர் மிகை	**உற்பத்தியாளர் செலவு**
1	22.5	82.5
2	82.5	22.5
3	22.5	105
4	22.5	22.5
5	105	82.5

12. நிறைபோட்டி சந்தையொன்றிலுள்ள பண்டம் ஒன்றின் கேள்வி நிரம்பல் வளையி வருமாறு



பண்டம் சமநிலையில் உள்ள போது

	நுகர்வோர் வாங்கத் தயாரான விலை	வழங்குனனர்விற்கத் தயாரான விலை	நுகர்வோர் மிகை	உற்பத்தியாளர் மிகை
1	OSEQ	OPEQ	RSE	PRE
2	OSEQ	OREQ	RSE	PRE
3	OREQ	OPEQ	PRE	RSe
4	OREQ	OSEQ	OREQ	QET
5	OPEQ	OSEQ	RES	PRE

13. X என்ற பண்டமொன்றிற்கான கேள்வி நிரம்பல் அட்டவணை காட்டப்பட்டுள்ளது. அரசு ரூபா 3இனை அலகு வரியாக விதித்தால் வரிக்குப்பின் **புதிய சமநிலை விலை** மற்றும் **சமநிலைத் தெகை**

விலை	5	4	3	2	1
கேள்வித்தொகை	110	120	130	140	150
நிரம்பல்த் தொகை	200	180	160	140	120

விடை	புதிய சமநிலை விலை	புதிய சமநிலைத் தொகை
1	ரூபா 5	140 அலகுகள்
2	ரூபா 4	120 அலகுகள
3	ரூபா 3	120 அலகுகள
4	ரூபா 2	140 அலகுகள
5	ரூபா 1	200 அலகுகள

14. மொத்த நிலையான செலவு ரூபா.46 எனக் கருதிக் கொள்க. 10அலகு வெளியீட்டுக்கான ஊழியத்தின் சராசரி உற்பத்தி 5 அலகுகளாகும். இங்கு ஊழியம் மட்டும் மாறும் காரணியாக இருப்பதுடன் கூலிவீதம் ரூபா12 ஆகும். 10அலகு வெளியீட்டுக்கான மொத்த சராசரிச் செலவு யாது?


1 ரூபா.2 2. ரூபா.5 3. ரூபா.7 4. ரூபா9 5. ரூபா12

15. குறுங்கால உற்பத்தி நிறுவனம் ஒன்று 100அலகினை வெளியீடு செய்கிறது. இவ் வெளியீட்டுக்காக சராசரி மொத்த செலவு 200ரூபா அத்துடன் சராசரி மாறும் செலவு ரூபா 150ஆயின் மொத்த நிலையான செலவு யாது?

www.ikeou.lk

1. ரூபா.5000 ஆகும் 2. ரூபா 500 ஆகும் 3. ரூபா. 0.50 4.ரூபா50 5.ரூபா.200

16. பின்வரும் வரைபடம் நிறுவனம் ஒன்றின் குறுங்கால உற்பத்தி தொழிற்பாட்டைக் காட்டுகிறது.எந்த வேலைவாய்ப்பு மட்டத்தில் இந்த நிறுவனத்தின் மொத்த வெளியீடு உச்ச மட்டத்தில் காணப்படும்



1. L1 **ஊழியம்** 2. L2 **ஊழியம்**
3. L3 **ஊழியம்** 4. L4 **ஊழியம்** 5. L5 **ஊழியம்**

17. நிறுவனமொன்றின் வெயியீடு அதிகரிக்கும் போது சராசரி நிலையான செலவானது தொடர்ச்சியாக குறைவடைகின்ற போதிலும் அது **பூச்யமாகதிருப்பதற்கான** காரணம்
1.மொத்தச் செலவு மாறாதிருப்பதாகும்
2.மாறும் செலவொன்று காணப்படுவதாகும்
3.சராசரிச் செலவொன்று காணப்படுவதாகும்
4.எல்லைச் செலவொன்று காணப்படுவதாகும்
5.நிலையான செலவு காணப்படுவதாகும்

18. ஒரு நிறுவனம் தனது சகல உள்ளீடுகளையும் 60% இனால் அதிகரிக்கும் போது அதன் வெளியீடு 80% இனால் அதிகரித்தது. இதன் மூலம் விளங்கிக் கொள்வது
1.இது குறைந்து செல்லும் விளைவு விதியாகும்
2.இது எல்லைப் பயன் விதியாகும்
3.இது மாறும் விகிதசம விதியாகும்
4.இது கூடிச் செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியாகும்
5..இது குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியாகும்

19.

தொகை	ஏல்லைச் செலவு	நிலையான செலவு
0	-	20
1	15	
2	10	
3	15	

இத் தரவின் படி மூன்றாவது அலகு வெளியீட்டுக்கான சராசரி மொத்த செலவு யாது?
1. ரூபா 5.00 2. ரூபா 11.67
3. ரூபா 13.33 4. ரூபா15.00
5. ரூபா 20.00

20. நிறுவனம் ஒன்றின் குறுங்கால இலாப உச்சப்படுத்தலின் போது எல்லை வருமானம் எல்லைச் செலவுக்குச் சமப்படும் நிலையில் சராசரிச் செலவும் சமனாயின்.
1. நிறுவனம் சாதாரண இலாபம் பெறும் 2. நிறுவனம் அசாதாரண இலாபம் பெறும்
2. நிறுவனம் நட்டம் அடையும் 4. நிறுவனம் தொழிலை விட்டு வெளியேறும்
5. நிறுவனம் உற்பத்தியை நிறுத்தும்

21. நிறுவனம் ஒன்றினது ஒரு வருடத்தின் தகவல்கள் வருமாறு.

பொருளியல் இலாபம்	4500 ரூபா	உள்ளார்ந்த செலவுகள்	2000 ரூபா
மூலப்பொருள் கொள்வனவு	2300 ரூபா	ஊழியர் சம்பளம்	1800 ரூபா
சந்தைப்படுத்தல் செலவு	1300 ரூபா		

இத்தரவுகளின் படி மொத்த வருவாய், கணக்கியல் இலாபம் என்பன முறையே

	மொத்த வருவாய்	கணக்கியல் இலாபம்
1	10 900 ரூபா	5 500 ரூபா
2	11 900 ரூபா	6 500 ரூபா
3	9 900 ரூபா	5 500 ரூபா
4	11 900 ரூபா	5 500 ரூபா
5	10 900 ரூபா	6 500 ரூபா

22. வர்த்தக சகட ஓட்டத்தின் பின்னடைவுக் கட்டத்தின் போது பின்வருவனவற்றுள் காணக்கூடியது
1.நுகர்வு வீழ்ச்சியடையும் வீட்டுத்துறை செல்வம் அதிகரிக்கும்
2.நுகர்வு அதிகரிக்கும் 3.தனியார் முதலீடு அதிகரிக்கும்

www.ikedu.lk

4.வேலைவாய்ப்பு மற்றும் பணவீக்கம் குறைவாக இருக்கும்
5.தனியார் சேமிப்பு வீதம் அதிகரிக்கும்.

23. தேசிய வருமானக் கணிப்பீட்டின் போது பல் கணிப்பீட்டுத் தவறினை தவிர்க்கக் கூடியதாக இருப்பது
1.கணிப்பீட்டின் போது மாற்றல் கொடுப்பனவை உள்ளடக்குதல்
2.இறுதி நுகர்வுப்பண்டம் மற்றும் இடைநிலைப்பண்டம் இரண்டையும் கணிப்பீட்டில் சேர்த்தல்
3.இறுதிப் பண்டத்தை மாத்திரம் கணிப்பீட்டில் சேர்த்தல்
4.இடைநிலைப்பண்டத்தை மாத்திரம் கணிப்பீட்டில் சேர்த்தல்
5.மீள் விற்பனை செய்யப்படும் பண்டத்தினைச் சேர்த்தல்

24. தேசிய கணக்கீடு தொடர்பான தரவுகள் வருமாறு (தரவுகள் மில்லியன் ரூபாவில் உள்ளது)

மொத்த முதலீடு	18
தேசிய வருமானம்	100
தேறிய ஏற்றுமதி	2
தனியார் வருமானம்	85
தனியார் நுகர்வுச் செலவு	70
சேமிப்பு	5
அரச கொள்வனவு	20
தேறிய உள்நாட்டு உற்பத்தி	105

இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி யாது?
1. 100 2. 95 3. 110 4. 107 5. 105

.

25. தேசிய வருமானக் கணிப்பீட்டின் படி உற்பத்தி செய்யப்படும் இடத்தில் இருந்து விற்பனையாளரை நோக்கி பொருடகள் செல்லும் போது உற்பத்தியாளரால் அறவிடப்படும் விலை
1. அடிப்படை விலை எனப்படும்
2. காரணி விலை எனப்படும்
3. உற்பத்தியாளர் விலை எனப்படும்
4. இரட்டைக் கணிப்பீட்டு விலை எனப்படும்
5. கொள்வனவாளர் விலை எனப்படும்

26. திறந்த பொருளாதாரம் ஒன்றின் பேரினப் பொருளாதாரத் தரவுகள் வருமாறு

நுகர்வு(C)	74 பில்	முதலீடு(I)	6 பில்
இறக்குமதி(M)	4 பில்	அரச செலவீடு(G)	12 பில்
அரச வரி(T)	8 பில்	ஏற்றுமதி(X)	6 பில்

பொருளாதாரம் பேரினச் சமநிலையை அனுபவிப்பதாகக் கொண்டால் சேமிப்பின் அளவ யாது?
1. 10பில் 2. 14பில் 3. 20பில் 4. 12பில் 5. 16பில்

27. எளிமையான கெயின்சியப் பேரினப் பொருளாதார மாதிரியில் ஆரம்ப தேறிய உள்நாட்டு உற்பத்தி சமநிலை ரூபா 15 மில்லியனாகும். இப் பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டம் 0.6 ஆகும். திட்டமிடப்பட்ட முதலீடு ரூபா 2 மில்லியன் வீழ்ச்சியடைந்தால் புதிய தேறிய உள்நாட்டு உற்பத்திச் சமநிலை அளவு
1.ரூபா. 11 2.ரூபா. 12மில் 3. ரூபா.12.5 மில் 4. ரூபா. 10மில் 5. ரூபா.14 மில்

28. பொருளாதாரமொன்றின் தன்னிச்சையான செலவீடுகளில் ஏற்படும் ரூபா100 மில்லியன் அதிகரிப்பு மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ரூபா 1000 மில்லியன் அதிகரிப்பினை ஏற்படுத்துமாயின் அப் பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டம் யாது?
1. 0.5ஆகும் 2. 0.9ஆகும் 3. 0.1ஆகும் 4. 0.25ஆகும் 5. 0.75ஆகும்

29. நாடு ஒன்றினது வங்கி முறையானது தனியொரு வங்கியை மட்டும் கொண்டுள்ளதாகக் கருதுக. இவ் வங்கி திரட்டிய மொத்த வைப்புக்கள் 4 000 பில்லியன் ஆகும். கொண்டுள்ள காசொதுக்கின் அளவு 1000பில்லியன் ஆகும். தற்போதய நிலையில் பொதுமகன் ஒருவன் குறித்த வங்கியில் 500 பில்லியன் ரூபாவை நடைமுறை வைப்பில் இட்டால் சட்ட நியதியான ஒதுக்கு வீதம் 20ஆக உள்ள நிலையில் வங்கி கொண்டுள்ள மிகை ஒதுக்கின் அளவு மற்றும் வழங்கக் கூடிய உச்ச கடனின் அளவு யாது?
1. மிகை ஒதுக்கின் அளவு 100 பில்லியன் வழங்கக் கூடிய கடன் அளவு 100 பில்லியன்
2. மிகை ஒதுக்கின் அளவு 600 பில்லியன் வழங்கக் கூடிய கடன் அளவு 600 பில்லியன்

www.lkedu.lk

3. மிகை ஒதுக்கின் அளவு 600 பில்லியன் வழங்கக் கூடிய கடன் அளவு 3 000 பில்லியன்
4. மிகை ஒதுக்கின் அளவு 100 பில்லியன் வழங்கக் கூடிய கடன் அளவு 500 பில்லியன்
5. மிகை ஒதுக்கின் அளவு 500 பில்லியன் வழங்கக் கூடிய கடன் அளவு 2 500 பில்லியன்

30. பெயரளவு வட்டிவீதம் 10% எனவும் எதிர்பார்க்கப்பட்ட பணவீக்கம் 5% எனவும் கருத்தில் கொள்க. அவ்வாறாயின் மெய்வட்டி வீதம் யாது?

1. 0.5% 2. 2% 3. 5% 4. 10% 5. 15%

31. பொருளாதாரம் ஒன்றின் வெளியீட்டின் அளவு வருடாந்தம் 4% இனால் அதிகரிக்கும் அதே வேளை பணத்தின் அளவு 6% இனால் உயர்கின்றது பணத்தின் புழக்கச் சுற்றோட்ட வேகம் மாறாது. ஆயின் விலை மட்டத்தில் ஏற்படும் அண்ணளவான அதிகரிப்பு மற்றும் தேசிய வெளியீட்டின் பணப் பெறுமதியின் அளவு யாது?

	விலை மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு	தேசிய வெளியீட்டின் பணப் பெறுமதி அதிகரிப்பு
1	2%	2%
2	2%	6%
3	6%	4%
4	10%	6%
5	2%	4%

32. இலங்கை மத்திய வங்கியானது வணிக வங்கிகளுடன் துணைநில் கடன் வசதி ஒப்பந்தங்களை மேற்கொண்டால்

(A) அழைப்புக் கடன் சந்தையில் வட்டிவீதம் கீழ் நோக்கி அசையும்

(B) அழைப்புக் கடன் சந்தையில் வட்டிவீதம் மேல் நோக்கி அசையும்

(C) அழைப்புக்கடன் சந்தையில் மேல் எல்லை வீதம் தீர்மானிக்கப்படும்

(D) அழைப்புக்கடன் சந்தையில் கீழ் எல்லை வீதம் தீர்மானிக்கப்படும்

சரியான விடையைத் தெரிவு செய்க

1. Aஉம் D உம் 2. Bஉம் D உம் 3. Bஉம் C உம்
4. Aஉம் C உம் 5. Aமட்டும்

33. திறந்த பொருளாதாரம் ஒன்றின் அரசின் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை அதிகரிக்கிறது. இப்போக்கானது ஒரு நாட்டின் வெளிநாட்டு நாணயமாற்று விகிதம் மற்றும் வர்த்தகப் பற்றாக்குறை என்பனவற்றில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தும்

	நாணயப் பெறுமதி	வர்த்தகப் பற்றாக்குறை
1	உயர்வடையும்	வீழ்ச்சியடையும்
2	உயர்வடையும	உயர்வடையும
3	தேய்வடையும்	வீழ்ச்சியடையும்
4	தேய்வடையும்	உயர்வடையும்
5	மாற்றமடையாது	மாற்றமடையாது

34. கீழ்வரும் தரவுகள் அனல் மின்னிலய உற்பத்தி ஒன்று தொடர்பானதாகும்

தனியார் நலன் 40 தனியார் செலவு 34
சமூகச் செலவு 60 சமூக நலன் 66

இத் தரவுகளில் இருந்து பெறக்கூடிய முடிவுகள்

1. வெளிவாரி நலன்களும் வெளிவாரிச் செலவுகளும் சமனாக உள்ளது.
2. வெளிவாரி நலன்கள் வெளிவாரிச் செலவுகளை விட உயர்வாக உள்ளது.
3. வெளிவாரி நலன்கள் வெளிவாரிச் செலவுகளை விட குறைவாக உள்ளது.
4. தனியார் செலவை விட சமூகச் செலவு உயர்வு என்பதால் தீங்கான செயற்பாடாகும்.
5. இவ் உற்பத்தியைத் தொடர்வது சிறந்தது அல்ல.

35. அரை பொதுப் பொருள் (போலிப் பொதுப் பொருள்)ஒன்று கொண்டுள்ள பிரதான பண்புகள் தொடர்பான சரியான விடையைத் தெரிவு செய்க

A) விலக்கல் விதிக்குட்படுவன B) வெளிவாரி நன்மையுடையன

C) நுகர்வின் போது எல்லைச் செலவு பூச்சியமானவை

www.ksu.lk

D) நுகர்வில் போட்டியற்றது E) விலக்குதல் விதிக்குட்படாதவை

1. Bஉம் E உம் 2. Bஉம் C உம் D உம் 3. Aஉம் C உம்
4. Cஉம் D உம் E உம் 5. A உம் D உம்

36. இலங்கையின் அரச பாதீடு தொடர்பான கருதுகோள் ரீதியான தரவுகள் வருமாறு

வரி வருவாய்கள் 340பில்
மொத்த நடப்புச் செலவினம் 380பில்
அரச கடன் வட்டிக் கொடுப்பனவு 36பில்
வரிசாரா வருவாய் 20பில்
மூலதனச் செலவும் தேறிய கடன் வழங்கலும் 160பில்

இத்தரவுகளின் படி பாதீட்டின் முதன்மைக் கணக்கு மீதி யாது?

1. -180பில் 2. +180பில் 3. -144பில் 4. -200பில் 5. +144பில்

37. A B ஆகிய நாடுகள் சம ஆற்றலுடைய வளச் சேர்க்கையைக் கொண்டுள்ளது. அவை ஒரு அலகு ஊழியத்தைக் கொண்டு உற்பத்தி செய்யத்தக்க X,Y உற்பத்தி பற்றிய தரவு பின்வருமாறு

நாடுகள்	உற்பத்தி அளவுகள்	
	X உற்பத்தி	Y உற்பத்தி
A	4	1
B	16	8

இவ்விரு நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தில் நன்மைகளை அடைய வேண்டுமாயின் அவற்றின் பரிமாற்று விகிதம் தொடர்பான சரியான தரவு யாது?

1. 1 X=0.25Y 1Y=2X 2. 1 X=0.5Y 1Y=4X 3. 1 X=0.2Y 1Y=1.5X
4. 1 X=0.3Y 1Y=3X 5. 1 X=0.6Y 1Y=5X

38. குறித்த ஒரு வருட காலப்பகுதியில் ஏற்றுமதி விலைச் சுட்டெண் 10% ஆல் அதிகரிக்க இறக்குமதி விலைச் சுட்டெண் 5% அல் அதிகரித்தது ஆயின் குறித்த ஆண்டுக்கான வர்த்தகமாற்று விகிதம் யாது?

1. 104.8 2. 95 3. 200 4. 116 5. 75

39. ஐக்கிய அமெரிக்காவில் நுகர்வோர் கொள்வனவுகளை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய தெரிவு செய்யப்பட்ட ஒரு மூடைப் பொருள்கள் U$ 120 விலையுடையன. இதே கூடையில் உள்ளடங்கும் பொருட்கள் இலங்கையில் ரூபா 10200 விலையுடையதாகக் காணப்படுகிறன. இதிலிருந்து நாம் உய்த்தறியக்கூடியது

1. ரூபா 25% மிகைமதிப்புடையதாக உள்ளது
2 .ரூபா 20% குறை மதிப்புடையதாக உள்ளது.
3. கொள்வனவு சக்தி சம மதிப்பு நாணய மாற்று விகிதம் டொலர் ஒன்றுக்கு ரூபா 80 ஆகும்
4. கொள்வனவு சக்தி சம மதிப்பு நாணய மாற்று விகிதம் டொலர் ஒன்றுக்கு ரூபா 85 ஆகும
5. வனவு சக்தி சம மதிப்பு நாணய மாற்று விகிதம் ரூபா ஒன்றுக்கு U$ 0.011 ஆகும்

40. நாடொன்றின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வேகம் பணவீக்க வீதம் குடித்தொகை வளர்ச்சி வேகம் தொடர்பான தரவுகள் பின்வருமாறு

ஆண்டு	பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வேகம்	பணவீக்க வீதம்	குடித் தொகை வளர்ச்சி வேகம்
2016	10 %	4.5 %	1.5 %
2017	15.5 %	5 %	1.5 %

இத்தரவுகளின் படி ஏற்றுக் கொள்ளக் கூடியது

1. பெயரளவுத் தலா உற்பத்தி 5.5% வீழ்ச்சியடைந்துள்ளது
2. மெய்த் தலா உற்பத்தி 4 % அதிகரித்துள்ளது
3. மெய்த் தலா உற்பத்தி 5 % அதிகரித்துள்ளது
4. மக்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைந்துள்ளது.
5. வருமானப்பங்கிட்டில் சமமின்மை குறைந்துள்ளது

41. பொருளாதார வளர்ச்சி இடம் பெற்றுள்ளதை பின்வருவனவற்றுள் எது குறித்து நிற்கிறது

1. உற்பத்தி சாத்திய வளையி இடது புறம் இடம் பெயர்தல்

www.kdu.lk

2. நீண்ட கால மொத்த நிரம்பல் வளையி வலப் புறம் இடம் பெயர்தல்
3. மொத்த கேள்வி வளையி வலப்புறம் இடம் பெயர்தல்
4. பிலிப்ஸ் வளையி மென் சாய்வாக வருதல்
5. வர்த்தக சகடோட்டம் நீண்ட காலத்தில் இல்லாதிருத்தல்


42. பேரினப் பொருளியல் குறிக்கோள் என்ற வகையில் உள்வாரிச் சமநிலை (Internal Balance)என்பதால் கருதப்படுவது யாது?
1. நிறை தொழில் மட்டமும் விலை உறுதிப்பாடும்
2. நிறை தொழில் மட்டமும் சென்மதி நிலுவையின் மிகை நிலுவையும்
3. ஏற்றுமதிகள் இறக்குமதிகளுக்குச் சமப்படல்
4. சேமிப்புக்கள் முதலீடுகளுக்குச் சமப்படல்
5. விலையுறுதிப்பாடும் நாணயமாற்று உறுதிப்பாடும்

43. 2015 செப்டெம்பரில் உருவாக்கப்பட்ட புதிய உலகிற்கான நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள் வெளியிடப்பட்டது. இது 17 நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களை உள்ளடக்கியது அவற்றுள் அடங்காதது.
(1) வறுமையை அனைத்து இடங்களிலும் அதன் அனைத்து வடிவங்களிலும் முடிவுறுத்தல்
(2) பட்டினியை முடிவுறுத்தல் உணவுப்பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட போசணை என்பவற்றை அடைதல் மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய வேளாண்மையை ஊக்குவித்தல்
(3) ஆரோக்கியமான வாழ்க்கையை நிச்சயப்படுத்தல் மற்றும் அனைத்து வயதிலும் அனைவரினதும் நல்வாழ்வை மேம்படுத்தல்.
(4) உள்ளடக்கமானதும் சமத்துவமானதுமான தரமான கல்வியை உறுதிப்படுத்தல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்கின்ற வாய்ப்பை மேம்படுத்தல்.
(5) பால் சமத்துவத்தை அடைதலும் அனைத்து பெண்கள் மற்றும் மகளிருக்கும் உரிமைகளைத் தடுத்தலும்.

44. யாவும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி என்பதனைக் குறித்து நிற்பது
(1) பொருளாதாரத்தின் சாத்தியவள வெளியீட்டில் ஏற்பட்ட நீண்டகால தொடர்ச்சியான அதிகரிப்பு
(2) பொருளாதாரத்தின் மெய்த்தேசிய உற்பத்தி அல்லது மெய் உள்நாட்டு உற்பத்தியில் நீண்ட காலத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பு
(3) பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் பரவும் வண்ணம் உயர்வான பேணத்தகு அபிவிருத்தி யடையப்படுவது
(4) அனைத்து மக்களுக்கும் வேவைல வாய்ப்பினை வழங்கி அடையப்படும் வளர்ச்சி
(5) பணவீக்கத்தாக்கங்களின்றி வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளும் வளர்ச்சி

45. அண்மையில் உலகின் பிரதான கைத் தொழில் நாடுகள் 8 சேர்ந்து உருவாக்கிய " G 8 நாடுகள்" கூட்டமைப்பில் உள்ளடங்கும் நாடுகள் முறையே
1) அமெரிக்கா, யப்பான், சீனா, பிரித்தானியா, ஜேர்மன், இத்தாலி, பிரான்ஸ்மற்றும் இந்தியா
2) அமெரிக்கா, யப்பான், பிரித்தானியா, ஜேர்மன், இத்தாலி, பிரான்ஸ், கணடா மற்றும் ரஷ்யா
3) அமெரிக்கா, யப்பான், சீனா, கொரியா, ஜேர்மன், இத்தாலி, பிரான்ஸ் மற்றும் தாய்லாந்து
4) அமெரிக்கா, யப்பான், சீனா, கொரியா, ஜேர்மன், இத்தாலி, ரஷ்'யா மற்றும் அவுஸ்டேலியா
5) அமெரிக்கா, யப்பான், சீனா, கொரியா, ஜேர்மன், இத்தாலி, இந்தியா மற்றும் பாக்கிஸ்தான்.

46. A,B ஆகிய இரு நாடுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட லோரன்ஸ் வளையி பின்வரும் வரைபு மூலம் காட்டப்பட்டுள்ளது.



A, B ஆகிய நாடுகளின் லோறனஸ் வளையி மூலம் நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய கூறைத் தெரிவு செய்க.
(1) A நாட்டை விட B நாட்டில் நியாயமான வருமானப் பரம்பல் காணப்படுவதுடன் B நாட்டின் கினிக்குணகம் A நாட்டை விடக் குறைவாகும்.
(2) B நாட்டை விட A நாட்டில் நியாயமான வருமானப் பரம்பல் காணப்படுவதுடன் A நாட்டின் கினிக்குணகம் B நாட்டை விடக் குறைவாகும்.
(3) A நாட்டை விட B நாட்டில் நியாயமான வருமானப் பரம்பல் காணப்படுவதுடன் B நாட்டின் கினிக்குணகம்

A நாட்டை விட அதிகமாகும்.

(4) B நாட்டை விட A நாட்டில் நியாயமான வருமானப் பரம்பல் காணப்படுவதுடன் A நாட்டின் கினிக்குணகம் B நாட்டை விட அதிகமாகும்.

(5) A நாட்டை விட B நாட்டில் நியாயமான வருமானப் பரம்பல் காணப்படுவதுடன் இரு நாடுகளினதும்கினிக்குணகம் பற்றித் தீர்மானத்துக்கு முடியாது.

47. நாடொண்றினது சனத்தொகை தொடர்பான கருதுகோள் ரீதியான தரவுகள் வருமாறு

மொத்த சனததொகை	தொழில் புரியும் வயது சனத்தொகை	தொழில் செய்வோர்	தொழில் தேடுவோர்	தொழில் புரியாதோர்
22M	15M	10M	2M	5M

இத்தரவுகளின் படி சரியான விடையைத் தெரிவு செய்க

	தொழில் படையில் பங்கு கொள்வோர் வீதம்	வேலையின்மை வீதம்	தங்கிவாழ்வோர் வீதம்
1	55.5 %	16.6 %	50 %
2	80 %	20 %	40 %
3	80 %	16.6 %	50 %
4	60 %	20 %	50 %
5	74 %	25 %	60 %

48. இலங்கையின் மொத்த உளநாட்டு உற்பத்திக்கு 2017 மத்திய வங்கி ஆண்டறிக்கையின் படி விவசாயம், கைத்தொழில்,சேவைகள் துறை வழங்கிய பங்களிப்பும் பொருளாதார வளர்சிவீதம், பணவீக்க வீதம் மற்றும் தொழில் இன்மை வீதமும்

	விவசாயம்	கைத்தொழில்	சேவைகள்	பொருளாதார வளர்சிவீதம்,	பணவீக்க வீதம்	தொழில்இன்மை வீதமும்
1	6.9 %	26.8 %	56.8 %	3.1 %	6.6 %	4.2 %
2	7.1 %	26.6 %	56.7 %	4.5 %	4.0 %	4.4 %
3	10.8 %	31.1 %	58.1 %	6.5 %	2.2 %	4.7 %
4	10.8 %	31.1 %	58.1 %	5.3 %	4.0 %	4.8 %
5	15. %	32.6 %	52.0 %	7.5 %	6.6 %	5.0 %

49. பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவிக்கும் பொருட்டு அறிவு உருவாக்கல் அதனை விரிவாக்கல் மற்றும் அறிவை நிலை நிறுத்துதல் என்பனவற்றை விளக்கும் பொருளாதாரம்

1. உலகப் பொருளாதாரம் 2. தொழிநுட்ப பொருளாதாரம் 3. அறிவுசார் பொருளாதாரம்
4. முகாமைத்துவப் பொருளாதாரம் 5. பேரினப் பொருளாதாரம்

50.”**குடித்தொகைசார் அநுகூலம்”** என்பதற்கு பொருத்தமான வரைவிலக்கணம்

1. தங்கி வாழ்வோர் தொகை அதிகரித்துச் செல்லும் நிலையாகும்
2. சிறுவர் தங்கியிருத்தல் மற்றும் முதியவர் தங்கியிருத்தல் சதவீதங்கள் சார்பளவில் மிகக் குறைவான பெறமதியைக் கொண்டிருத்தல்.
3. பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் வீழ்ச்சியடைந்து செல்லுதல் .
4. குடிவரவ வீதத்திலும் பார்க்க கடியகழ்வு அதிகமாக இருத்தலாகும்.
5. வேலைசெய்யும் வயதிலான சனத்தொகை அதிகரித்தலாகும்

www.kru.lk